ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பிராமாணிகர்கள் பிரமாணங்களைக் காப்பாற்றிக்கொண்டு வரவேணும். காப்பாற்றமல் கைவிட்டுவிட்டால் அவைகளின்வாயிலாகத் தெரிந்துகொள்ளவேண்டிய பிரமேயங்கள் தெரிந்துகொள்ளமுடியாமற் போய்விடும். தெரிந்துகொள்ளவேண்டியவைகளைத் தெரிந்துகொள்ளாவிடில் இஹபரசிரேயஸ்ஸையடைவதெப்படி? பயிர்களைப் பட்டிமாடுகள் அழித்துவிடுவதுபோல் தர்மப்பிரமாணங்களை தர்மமார்க்கத்தை நம்பாத நாஸ்திகர்களும் புறமதப்பற்றுள்ளவர்கள் அழித்துவிடப் பார்ப்பார்கள். ஆகையால் அவர்கள் பார்வையிற் படாமலே அவைகளைப் பாதுகாக்கவேண்டியது பண்டிதர்களின் கடமை. அவ்விதமே நம் முன்னோர்களான மனுமுதலிய மஹான்கள் காப்பாற்றிவந்தார்கள். அந்த த்வேஷத்தாற்றான் தற்காலத்திய சிலர் அம்மஹான்களை சுயநலக்கருதியவர்களாகக் கூறிகண்யமில்லாதவர்கள்போல் செய்துவிட்டார்கள். அந்தமயக்கத்திலகப்பட்ட சிலர் அதையே நம்பிவிட்டார்கள். அந்த வழியாகச் சிலர் நம் தர்மமார்க்கங்களிற் புகுந்து தர்மப்பிரமாணங்களைக் கெடுத்துவருவதைக் கண்ணுரக்கண்டும் நம் பண்டிதர்கள் இன்னும் மௌனவிருதத்தை முடித்துக்கொண்டபாடில்லை. எதிர்வாதம் செய்யாத கக்ஷிபோல் அவர்களது கக்ஷி வலிமையடைந்துவிடுகிறது. இவ்வாறு முடிந்துவிட்டதைச் செவியுற்று சிரமப்படுகிறார்கள். முந்தியே கவனம் செலுத்தி இருப்பார்களானால் இப்பொழுது இவ்வளவு சிரமப்படவேண்டிவராது. கடந்ததைக் கூறுவதில் காரியமொன்றுமில்லையென்றாலும் இப்பொழுதாவது விழித்துக்கொண்டு கெட்டுப்போனதைச் சிறிது ஸரிப்படுத்துவார்களானால் ஒன்றன்மேலொன்றாகச் சேர்க்கொண்டுவரும் திருத்தக்காரர் சட்டம் நம்மை பாதிக்காதபடி பார்த்துக்கொள்ளலாமேயென்று அதைச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இவ்வுலகநன்மைக்காக எவ்வுலகத்திலும் நன்மையைப் பயக்கும மதாசாரத்தை விட்டுவிடவேண்டுமென்று சிலர் ஹிதோபதேசம் சொல்லிவருகிறார்கள். இவ்வுபதேசம் ஒழுங்கானதாவென்று ஒவ்வொருவரும் நிதானித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். சோளப்பொரிக்காக வைக்கோல் போரைக் கொளுத்தியவன் போல் இவ்வுலகத்தில் நேரும் அற்பஸுகத்திற்காக நீண்டகாலத்தில் அனுபவிக்கக்கூடிய சிரேயஸ் ஸாதனத்தை விட்டவன் ஆய்விடுவான். அன்றியும் புறநாட்டார் செய்யும் சில்லரைத் தீங்குகளை ஸஹிக்கமுடியால் மதாசாரவிருத்தமான காரியங்களில் தலையிட்டு நரகத்தில் விழத்துணிவது எறும்பு கடியைத் தாங்காதவன் பாம்பின் வாயில் கைவிடத்துணிந்ததுபோலாகும். ஆகையால் தர்மவிரோதிகள் சொல்லுவதை நம்பி அவஸரப்பட்டு மதாசாரத்தை விடத்துணிபவர்கள் பிராமாணிகர் சொல்லுவதையும் கேட்டுமனதில் வாங்கிக்கொண்டு நிரவிளங்க விசாரித்து சிரேயஸ்ஸாதனத்தையே கைப்பற்றிக் கரையேறுவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

உ

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ மாசி-௴ கூஉ

## விவாஹ காலம்.

ஒருவிஷயத்தை நிரூபிக்க நினைத்தவன் முதலாவது பிரமாணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தப்பிரமாணம் வேறு பிரமாணத்தோடு விரோதப்படாமலிருக்கின்றதாவென்று கெவனிக்கவேண்டும். விரோதப்படுமானால் பிரபலப்பிரமாணத்தோடு விரோதப்படுகிறதா? துர்பலப்பிரமாணத்தோடு விரோதப்படுகின்றதா? என்று விசாரிக்கவேண்டும். துர்பலப்பிரமாணத்தோடு விரோதப்படுவதைக் கெவனிக்கவேண்டாம். அந்தப் பிரமாணம் துர்லபமானது பற்றியே பிரபலப்பிராமாணத்தால் ஏற்பட்ட விஷயத்தை மாற்ற சக்தியற்றதென்பது பிரசித்தமே. பிரபலப்பிரமாணத்தோடு விரோதிக்குமாயின் அப்பொழுது துர்லபப்பிரமாணத்தால் ஏற்பட்ட விஷயம் நிலைக்காது. இயற்கையாகவே சுருதி என்னும் பிரமாணம் பிரபலமானது. அதைவிட மற்றப்பிரமாணங்கள் துர்லபங்களாம். அந்த சுருதிப்பிரமாணம் ஜீவராசிகளனைவரும் இவ்வுலகத்தோடு நின்றுவிடுவதாகக் கூறவில்லை. ஆனால் ஸ்வர்க்கம் நரகம் முதலிய லோகாந்தரத்திற்கும் போய் வருவதாகவும் அதற்கு தர்மங்களை காரணமென்பதாகவும், கூறுகின்றது. இவ்வுலகத்தைவிட உயர்ந்த லோகங்களில் நீண்டகாலம் வசிப்பதற்கு சுருதி கூறியவாறு இங்கு செய்யப்படும் கர்மயோகந்தான் இன்றியமையாத ஸாதனம். அதனால் இவ்வுலக இன்பத்தையே பெரிதாக நினைக்கக்கூடாதென்றும், ஒரு சமயம் அது நேர்ந்துவிட்டாலும் கொடி நோத்திற்குள் கண்டழியக் கூடியதானபடியால் வெறுக்கத் தக்கதென்றும் சுருதிகூறுகின்றது. தற்காலத்திய சிலர் அதற்கு நேர் விபரீதமாக இவ்வுலக நன்மைக்காக பேரின்பத்தைப் பயக்கும் புனிதமான மதாசாரத்தை விட்டுவிடவேண்டுமென்று பிரசங்கமேடையில் பஹிரங்கமாக கூறி ஆர்யச்சிறுவர் மனதைக் கலக்கிவிடுகின்றனர். பாலிகா விவாஹத்தால் உலகம் கெட்டுப்போவதாகவும், அது சிறிதுகாலத்திற்கு முன்தான் முஹம்மதியர்களுக்குப்பயந்தவர்களால் அது

ஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டதாகவும், முன்னோர்கள் காலத்திலெல்லாம் ப்ரௌடாவிவாஹந்தான் பெரும்பாலும் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததாகவும், அதையே மீண்டும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்துவிட்டால் உலகம் க்ஷேமத்தையடைந்துவிடுமென்பதாகவும், முழுப்பூசினிக்காயை மறைத்த கதையாகப் பேசுகின்றார்கள். இவ்வாறு எந்தப்பிரமாண நூல்களில் கூறப்படுகின்றதென்று கேட்டால் தாறுமாறாய் எதையோசொல்லுகிறார்கள். பிரௌடாவிவாஹமே பெரியோர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தால், பிரௌடாவிவாஹத்தைச் செய்யும்படி சட்டமிட்ட வேனமஹாராஜனை நம் முன்னோர்கள் சபித்தது எதற்காகவோ? தெரியவில்லை. பாலிகாவிவாஹ விதியை பலப்படுத்தின பல்கோடி பிரபலமன்னர்களைப் புகழ்ந்து ஆசிகூறியது எதனாலோ? இந்தப் பிரபலப் பிரதான சரித்திரங்களைப் புறக்கணித்துவிட்டு புதுக் கதைச் சொல்லி ஏமாற்றிவருகிறார்கள். முகம்மதியர்களுக்கு சிலர் பயந்தார்களென்பது ஒருவாறு சரியாயிருக்கலாம். அதற்காகப் பிராசினவழக்கத்தை மாற்றிவிட்டார்களென்பதும் உசிதமானதாக அங்கீகரிக்க இடமில்லை. முகம்மதியர்கள் மதவெறி பிடித்துப் படுத்தினபாட்டையும், அப்பொழுது நம் பாரதநாட்டார் தன் மதத்தைக் காப்பாற்றின கதையையும் கேட்டறிந்தவர்களுக்கு இதன் உண்மை விளங்கும். சில மந்திரங்களைக்கொண்டு பிரௌடாவிவாஹத்தை அனுமானம் செய்வார்களானால் அது பிரத்யக்ஷ சுருதிக்கு விரோதப்படுவதாலும், லிங்கத்தைவிட சுருதி பிரபலம் பிரமாணமானதாலும் அந்த அனுமானம் நிலைக்கமாட்டாது. இதைப்பற்றிய விரிவான விசாரம் பட்டவார்த்திகத்தில் ஹேதுதர்சனாதிகரணத்தில் செய்யப்பட்டிருக்கிறது. பிராமாணிகர்கள் அந்த விசாரத்தை முழுவதும் படித்துப்பார்த்து செய்ய வேண்டியகாரியத்தை நிதானித்துத்தீர்மானித்துக்கொள்ளவேண்டும். அவசரப்பட்டு யாரோ சொல்வதைக்கேட்டு, இகலோகசுகத்திற்காக மாத்திரம் ஆசைப்பட்டு, பரலோக பாக்யத்தையிழந்துவிட்டு, வஞ்சக வார்த்தையில் கட்டுப்பட்டு, ஏமாந்துபோகாமல் யாவரும் பிராசீனமான பெரியோர்கள் வழியே நடந்து இம்மையிலும் சுகப்பட்டு மறுமையிலும் ஆனந்தப்பட வேணும். சுபம்!

சுபம்!

பத்திராதிபர்.

# இப்படியாவது செய்யலாமா?

**आरम्भशूराः खलु दाक्षिणात्याः** தென்தேயத்தவர்கள் கார்யத்தை ஆரம்பம்செய்வதில் சூரர்கள் என்று நம்மவர்கட்குப்பெயர் வெகுகாலமாய் உண்டு. இம்மூதுரை எல்லா விஷயத்திலும் ஒத்து வருவதும் யாவரும் அறிந்ததே. இது இப்போதும் நமக்கு அநுபவத்தில் வந்தது. பெரியோர்களின் வசனம் தவறுமிருக்கிறது எனினும் இவ்வசனம் வெகுமானவசனமில்லை. மற்று நம்மை இகழ்ந்துகூறும் வசனம் இதை நாம் நீக்கமுயன்றால் அதனால் ரிஷிகளுக்காவது ஈசனுக்காவது கோபம் வருமோ? ஆதியில் மணப்பிரதிபந்தகம் சட்டமானதும் நம் பெரியோர்கள் குதித்த குதிகாலுக்கே பங்கம் வந்துவிடுமோவென்று நினைத்தனர். ஆயினும் சீர்திருத்தப்புலிகள் இந்த சிலுசிலுப்புக்கு அஞ்சவே இல்லை. நெல்லிக்காய்மூட்டைகளான இவ் வைதிகர்கள் ஆரம்பத்தில் எதிலும் இவ்விதம் தாண்டிக்குதிப்பது வழக்கம்தான். பிறகு பணம் என்று பேச்சு கிளம்பும்போது ஒருவரையொருவர் சந்திக்காமல் வீட்டுக்குள் மெதுவாய்ச் சென்று தாளிட்டுக்கொண்டு விடுவார்கள் என்று மிகப்பச்சையாகவே பத்திரிகைகளில் எழுதியும் மேடைகளில் பேசியும் விட்டார்கள். அவ்விதமே நாமும் நடந்துகொண்டுவிட்டோம். இத்தகைய நாம்தான் மதத்திற்கு ஜவாப்தாரியென்று சொல்லிக்கொள்ளுகிறோம். உண்மையில் ஈசன் காணிப்பு இல்லாமல் பிறமதம்போல் மானிடர்களின் பொறுப்பில் நம் மதம் இருந்திருக்குமானால் இது இதுகாறும் இவ்வளவு ஸ்வரூபம்கூட வைத்துக்கொண்டு நிற்காது. பார்ப்போம். பிறமதங்களை அம்மதவருள் எவரேனும் தன் மதத்தை இகழ்ந்து பேசுபவர் கிடையாது. நம் மதத்திலோ அவ்விதமில்லை. வேதங்களையும், சாஸ்திரங்களையும், முன்னோர்களையும், மகரிஷிகளையும், நாம் இகழ்வதுபோல் ஒருவனும் செய்யமாட்டான். இவர்களே அதிகப்பட்டவர்களாயினும் இன்னும் மதம் முன்போல் நிற்கிறது. புறமதம் போல் எங்கேயோ முதலில் பிரசித்தமாய் இருந்துவிட்டு ஏதோ ஒரு காலத்தில் இந்தியாவில் நுழைந்ததென்றும் சொல்ல முடியாது. ஆகவே ஈசனே இம்மதத்தைக் காப்பற்றிக்கொள்வர்? திருப்பித்திருப்பியா நான் கதறுவதெல்லாம் பத்திரிகை

ஆரம்பிக்கிறேனென்று ஆவலாம் செய்துவிட்டு அமர்ந்தவே என்பதுதான். பிரகிருதம் அடியில் வருமாறு செய்யலாமாமென்று உத்தேசிக்கிறேன். சின்னாட்களுக்கு முன் மதிராஸ் மைலாப்பூரில் K. G. நடேசசாஸ்திரியாரென்பார் ஆங்கிலத்தில் கல்பத்ருமம் என்றோர் வாரப்பத்திரிகை நடத்திவந்தது பெரியோர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அது ஆதியில் சற்று அதிகமாகவே வேலை செய்தது. அதை முற்கூறப்பெற்றவரே சொந்தப்பொறுப்பில் நடத்திவந்தார். அப்பத்திரிகையை ஸ்ரீமடத்தில் அனுக்கிரஹித்து விசேஷமாய் நடத்துவதென்ற பிரஸ்தாபம்கூட அக்காலத்தில் கிளம்பியது பிறகு காலவேற்றுமையால் அம்முயற்சி குன்றியது. அப்பத்திராதிபரும் ஆதரிப்பாரின்றி அதனை நழுவவிட்டார். ஆகவே அப்பத்திரிகையை மீண்டும் வாரப்பத்திரிகையாய் ஆரம்பித்து நடத்தவும் நமது ஆர்யதர்மத்தை வாரத்திற்கு 3-பத்திரிகையாய் கொஞ்சநாளும் உடனே தினசரிபத்திரிகையாய் நடத்தவும் ஏற்பாடுசெய்யலாம். இதற்கு நம் ஆஸ்திகர்கள் துணையாய்நின்று இவ்விரண்டையும் பிரசாரப்படுத்த முன்வந்தால் போதும். இதற்கு மூலதனம் மடாதிபதிகள் கொடுப்பதாய் அனுக்கிரஹித்தபொருளே போதும். இவ்விதம் செய்தாலும் நமக்கு ஈசன் அருள் வேண்டும். பிரகிருதத்தில் சாரதாசட்டத்திற்குச்சாதகமாய்நின்ற காங்கிரஸ்காரர்கள் சட்டசபையை விட்டு விலக நேர்ந்ததையும் மதவிஷயமென்று எண்ணாமல் சட்டமாக்கின கவர்ன்மெண்டுக்கு தற்காலம் நேர்ந்திருக்கும் இடறுகளையும் சற்று கவனித்தால் உத்தமமான நம்மதத்திற்கு துரோகம் நினைத்தது தான் காரணம் என்று சொல்லும்படி நேருகிறது. இதற்கு

> श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
> स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

என்ற கண்ணன் வாக்குத்தான் பிரமாணம். இந்தியாவிற்கு ஏற்பட்ட தர்மத்தைத் தலைகீழாய்ப் புரட்டி மேற்றிசையார் தர்மத்தைக் கைக்கொண்ட காங்கிரஸ்காரர்களுக்கு இது பயத்தைக் கொடுக்கும். தங்கள் தங்கள் தர்மம் அப்படியே நடப்பதை நான் தடங்கல் செய்யாமல் செங்கோல் செலுத்துவேன் என்று சபதம் செய்து ராஜ்யம் பெற்றுக்கொண்ட பரம்பரையினருக்கும் அதைப் புறக்கணிப்பதும் பயம் தான் என்றேற்படுகிறது. இது எவ்வித

மாயினும் ஆகட்டும். நம்மவருக்குப் பேபர் அவசியம் என்பதை நன்கு மனதிலிருத்தி இக்கைங்கர்யத்திற்காகவாவது நம் ஆஸ்திகர்கள் முன்வரவேண்டுமென்று ஸர்வேசுவரனைப் பணிகின்றேன்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரி, மதுரை.

---

## சேலம்ஜில்லா பிராம்மணமகாநாட்டில் அக்ராஸனம் வகித்த வித்வத்பூஷணம் பிரஸங்கபானு சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ K. வைத்தினாதசாஸ்திரிகள் அவர்களின் பிரசங்கம்.

ஐயன்மீர்!

நமது மதம், வருணம், ஆசாரம் இவற்றின் சம்பந்தத்தையறிந்த பண்டிதர்களே வெளிவாராரயின் நமக்கு அதிலும் வேறான குறைவுண்டோ. அறிஞர்காள்! சிறிது செவி கொடுங்கள். முன் மாந்தாதாமுதல் நந்தனீராகருள்ள அரசர் இப் பூமண்டலத்தை ஆண்டுவந்த காலத்தில் அந்தணர்களுக்குள் அறிஞர்க்கு அதிக கௌரவமும் மற்று அவரிடம் அன்பும் பெருகிவந்தது. அவர் சொல்வது தருமமாய் நடந்தது. அவருக்குக் கல்வியொழுக்கங்களும் நன்மையடைந்திருந்தன. இக்காலத்தோர் வேதங்களையாவது சாஸ்திரங்களையாவது எவரும் முற்றிலும் கற்பதில்லை, நல்வழி மாறாது நடப்பதில்லை, ஆஸ்திகம் புகழிருப்பதில்லை. ஜீவகாருண்ணியம் பெறுவதில்லை, உலகநிலையறிவதில்லை, இதற்கெல்லாம் காரணம் நம் தேசத்துப் பண்டிதர் உதாசினமே. ஐயா இக்காலத்தில் இத்தேசத்துப் பிள்ளைகளாலே இப்புண்யபூமிக்கு நேர்ந்த பெரும் விபத்தைப்பாருங்கள். இக்காலத்திலோ ஆங்காங்கு கூடி ஏதேதோ சில ஆசாரங்களை நமது தேசத்திற்குச் செய்விக்கவேண்டுமென்று உத்தேசித்து நம் பண்டிதர் அறியாத ஆங்கிலேய பாஷையில் பேசிமுடிக்கின்றார்கள். இவர்களுள் பரம்பரையில் வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர் மிகக் குறையும், ஏதோ அரையாங்கில உச்சரிப்புப்படர்ந்து தள்ளியொழிந்து பிரகாரணம் அழிந்துள்ள சில வசனங்களை மொழிந்து தம் மனதிற்பட்ட ஆங்கிலேயாசாரத்தை நம் தேசத்தில் நாட்ட முயல்கின்றார்கள். இவர்களுக்கு ஆங்கிலேய சொற்களே ஆபா

ணங்கள், அத்தேச சரித்திரங்களே அறநூல்கள், சமாசார பத்திரிகைகளே சத்புராணங்கள், நூல்களைக்கற்று அப்புறம் நமது சிஷ்டாசாரத்துக்குபதிலாய் மேத்திசையார் ஆசாரத்தைக்கொண்டு ஓர் முடிவுசெய்ய முயல்கின்றனர். அந்தோ! ஒருசமயம் மேற்றிசையார் ஆசாரங்கள் நமது தேசத்தில் நிலைபெறுமாயின் அப்பொழுது அது அருவருக்கத்தக்கதாயினும் இக்காலத்தில் அது எவ்வளவும் நமக்கு ஒவ்வாது பாருங்கள். நமது பெண்டீர்கள் வேறு புருஷனிடம் தனி அறையில் ரகஸியம் பேசவும், பரபுருஷன் வீட்டிற் தானே வெகுகாலம் இருக்கவும் பல அவயவங்கள் தெரிய ஓர் உடை உடுத்தி வேறுபுருஷன் கைபிடித்தாடவும் நீதிசாலைகளில் மற்ற புருஷனுடன் தனது சம்பந்தத்தை தன் பெண்சாதி ஒப்பவும் முன் புருஷன் கேளிவிலாஸசக்தியை பின்புருஷருடன் சொல்லிக்களிக்கவும் மற்றவர் குடித்த மிருதியைக் குடிக்கவும் வைத்தியர் பரீக்ஷிக்கவேண்டி தனது சரீரத்தை மற்றவருக்குக் கொடுக்கவும் சிறு பிள்ளைகளுக்கு பெண்களே கர்ப்பசிகிஸ்ஸை கற்பிக்கவும் தேசம்விட்டு தேசம் சஞ்சரிக்கவும் நேர்ந்தால் எந்தப் புருஷனும் அதை அருவருக்காதிருப்பாரா? இவ்விஷயங்களெல்லாம் மேற்றிசையிற் சாதாரணமாயிருக்கின்றது பாருங்கள். மேற்றிசையிற் விவாகசம்பந்தவிலக்கு வழக்கு அடிக்கடி கணக்குக் கடங்காது நேருகின்றன. முன்புருஷனைவிட்டு அவனிருக்க மற்றவனையும் மணப்பார்கள். பல பிள்ளைகள் பெற்று பல புருஷருடனிருந்து வயதுசென்ற மாதை மற்ற சிறுவன் மணம்புரிவான்.

சிலர் கன்னிகைகளாகவே காலம் கழிக்கின்றார்கள். இங்கனமாயின் ஒருத்திக்கு பல புருஷர் என் பல பெண்களுக்கு புருஷரே இல்லையென்றும் பெண்களுக்குப் பெரும் கஷ்டம் அத்தேசத்தில் உள்ளது. ஒரு புருஷன் கிடைக்காமல் பெருமாட்டிகள் அனேகர் மடந்தையாயும் மறிக்கின்றனர். அந்தேசத்திலும் பெண்கள் பருவமடைவதற்கு முன் எவ்விதத்திலும் பெரியோர் ஒரு புருஷனிடம் பெண்ணைக்கொடுக்கவேண்டிய நிர்பந்தமும் ஒரு புருஷனுக்கப்புறம் மறுபுருஷன் கூடாது என்னும் நிர்ப்பந்தமும் இருக்குமேல் அவ்விடத்தில் முற்கூறிய உபத்திரவம் வரப்பெறாது பாருங்கள்.. ஓரே தேசத்தில் ஒருத்தி மிருகம் போல் காவலரைக் கடந்து கணக்கிலடங்காத புருஷரை மணந்திருக்கும் பொழுதே ஒருவனைக் காதல் தன் கணவனெனப் பெயருங்காவது சொல்லு

வாற்றலற்றுப் பலபெண்களை நிறுத்திவைத்தலென்றும் இஃதெவ்வளவு கொடுமை. ஆதலாற்றான் நூற்றிற்கு இருபத்தெட்டே புருஷருடன் கூடி வாழ்பவர். இத்தேசத்தோ நான்பத்தி நான்காகின்றது. மற்றவரோ புருஷனை இழந்த கைமபெண்களேயன்றி புருஷன் பெயரறியாதவரல்ல. மற்றும் ஒருவன் ஒருத்தியையே விவாகம் செய்யவேண்டுமென்றும் நிர்ப்பந்தம் அவருக்குண்டு. இவ்வழியை இத்தேசத்தில் நாட்டவே நங்குழந்தைகள் வெகு சிரமப்படுகிறார்கள். இனி இதன் பயன் மேற்றிசையாற்கு சந்தோஷமேயன்றி வேறில்லை. இனியும் அறிஞர் மையல் கொள்வரேல் நமது மதாசாரங்கள் ஒழிந்தேபோம். ஆதலின் வெளியேறுங்கள். உண்மையை வெளியிடுங்கள். காலமோ குறைவு மற்றவர் முயல்கின்றார். ராஜாங்கத்தாரும் பிரவேசித்தால் வருங்கேடர்தம், பின் உங்கள் முயற்சி பயன்படாது. ஆதலின் சபைகளைக் கூட்டுங்கள். அங்கு உண்மையை நாட்டுங்கள். அவற்றை நமது தவப்பயனாப் பாரததர்ம மகாமண்டலத்துடன் சேருங்கள். ஹிந்து லகுவேத சங்கத்தையடையுங்கள். நம் தேசத்துக்குள்ள ஆபத்தைக் கவனியுங்கள். உலகநீதியைப் பத்திரிகைகளாலறியுங்கள். வீண்காலம கழிக்கவேண்டாம். உங்கள் முயற்சி கைகூடவேண்டி உண்மைப் பொருளை வழிபடுங்கள். இக்காலமோ உங்கள் பெண்டிர் பிள்ளைகள் சிடர்கள் இவர்களை உங்கள் சுதந்திரமாகாதடிக்கின்றது. அவரகளன்றி உங்கள் இல்லறம் நடப்பதெப்படி? ஆதலின் கையிலிறகும் நாவில் நன்மொழிகளும் உங்களுக்குப் பெருகுகவென்று உலகெலாம் கடந்தவுண்மைப்பொருளாகிய உமாபதியைத் துதிப்போமாக. சுபம்!

K. வைத்தினாதசாஸ்திரிகள்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமா னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

விதமாக ஒரே சிராத்தத்தை ஒப்புக்கொள்ளவில்லையா? சிராத்த போஜனம் செய்யாமலிருப்பவனுக்கு ஒரு ஸ்மிருதியிலும் தோஷம் ஸம்பவிப்பதாக விதிக்கவில்லை. அதுபோல் விவாஹம் செய்து கொள்ளாமலிருக்கும் வானுக்கும் தோஷமுண்டென்று ஸ்மிருதிகளில் சொல்லப்படாததால், வானுக்கு விவாஹம் காம்யந்தான் என்பது நிச்சயம். புருஷர்களுக்கு விவாஹம் செய்துகொள்ளாமலிருப்பதை அனுசரித்து தோஷமுண்டென்பது ஓரிடத்திலும் காணவில்லை. ஆனால், "பிராமணன் ஒரு ஆச்ரமத்தையும் அவலம்பிக்காமல் அனுச்ரமியாக ஒரு நிமிஷங்கூட இருக்கலாகாது. அவ்வண்ணம் ஆச்ரமமொன்றுமின்றியிருப்பவனுக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியது அவசியம்" என்ற தக்ஷ ஸ்மிருதிவசனத்தால் "பிரும்மசர்யம்" "கிருஹஸ்தாச்ரமம்" "வானப்ரஸ்தம்" 'ஸன்யாஸம்' என்ற நான்கு ஆச்ரமங்களுள் ஒன்றையும் அடையாமல் நிராச்ரமியாக இருக்கக்கூடாதென்று தோஷம் விதிக்கப்பட்டிருக்கின்றதேயன்றி இந்த ஸாமான்ய வசனத்தைக் கொண்டு "விவாஹம் செய்துகொள்ளாதவனுக்கு தோஷமுண்டென்று" விசேஷ நிஷேதமும் ஸித்திப்பதற்கு எவ்வித நியாயமுமில்லை. இவ்வசனத்திலிருக்கும் ஆச்ரமம் என்றபதத்திற்கு கிருஹஸ்தாச்ரமம் என்று விசேஷார்த்தமுரைப்பதற்குப் பிரமாணம் யாதொன்றுமில்லை. இவ்வாச்ரமத்திற்கு கிருஹஸ்தாச்ரமம் என்று விசேஷார்த்தம் கூறுவதற்குப் பிரமாணம் இருக்குமாயின் இந்த தக்ஷஸ்மிருதி வசனத்தையே புருஷர்களுக்கு விவாஹம் நித்யமென்பதற்கும் பிரமாணமாக ஒப்புக்கொண்டுவிடலாம். அவ்விதமில்லையே! அன்றியும் "ஆச்ரமங்கள் நான்கென்பதில்லை. கிருஹஸ்தாச்ரமம் என்ற ஒரு ஆச்ரமந்தான் உண்டென்று" சாஸ்திரப்பிரமாணமூலமாக ஸித்தித்துவிடுமேயானால் "கிருஹஸ்தாச்ரமம் புருஷர்களுக்கு நித்யமென்பதையுமிச்சாமான்ய வசனத்தினாலேயே ஸித்தித்துவிடுவதாக பிரதிக்ஞைசெய்ய முடியும். சாஸ்திரங்களால் பிரும்மசரியம் முதலிய நான்கு ஆச்ரமங்கள் உண்டு என்றல்லவா வெளியாகின்றன? ஆகவே அந்த நான்கு ஆச்ரமங்களுக்குள் விவாஹமூலமாகவே ஏற்படும் கிருஹஸ்தாச்ரமத்தில் கொஞ்சங்கூட விருப்பமில்லாமலிருக்கும் அதி தீவிர வைராக்யமுள்ள யாராவது ஒரு தீரபுருஷன் உயிருக்கும் வரையில் குருகுலத்திலேயே பிரும்மசர்யாச்ரம நியமங்களு

டன் நைஷ்டிக்கப் பிரும்மசாரியாகவுமிருந்துவிடலாமன்றோ. இவ்வண்ணம் நைஷ்டிகப்பிரும்மசாரியாக இருப்பவனுக்குக் குற்றம் உண்டென்று எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கின்றதா? குற்றங்கூறவில்லையென்பது மட்டிலுமின்றி சாந்தோக்யோபநிஷத்தில் "வைதிககர்மாக்களை அனுஷ்டிப்பதற்கும், அதன் பிரயோஜனங்களை அனுபவிப்பதற்கும், தகுதியாகவுள்ள ஆச்ரமங்கள் மூன்றுவிதம்" என்று ஆரம்பித்து, "உயிரிருக்கும் வரையில் குருகுலத்திலிருந்துகொண்டு பிரும்மசரியதருமங்களுடன் காலங்கழித்துவரும் நைஷ்டிகபிருப்மசாரியானவன், பிரும்மலோகம் முதலிய புண்ணியலோகங்களையடைவான்" என்று கூறியிருப்பதால், அத்தகைய பிரும்மசாரிகளுக்கு பிரும்மலோகம் முதலிய புண்யலோகமும் உண்டென்றன்றோ ஏற்படுகின்றது. இவ்விதமாகவே மனுஸ்மிருதியிலும் "குருகுலத்தில் நைஷ்டிகபிரும்மசாரியாக வசித்துவருவதற்கு விருப்பமிருக்கும் பக்ஷத்தில், மரணபரியந்தம் குருசுச்ருஷை செய்துவரவேண்டும். இவ்வண்ணம் பக்திவிசுவாசத்துடன் மாணகாலம் வரையில் குருவுக்குப் பணிவிடைசெய்துவரும் பிரும்மசாரிக்கு நித்யமாயிருக்கும் பிரும்மலோகம் பலமாகும்" என்றும், "இவ்வாறாக, மரணபரியந்தம் குருவையோ, குருபுத்திரனையோ, அல்லது அக்னிபகவானையோ சுச்ருஷைபுரிந்துவரும் நைஷ்டிகப் பிரும்மசாரியானவன் பிரும்மலோகம் என்ற உத்தம பதவியை அடைவான். கர்மாதீனமாகமீண்டும் இச்சம்ஸாரத்தில் ஜன்மமெடுக்கமாட்டான்" என்றும் நைஷ்டிகப் பிரும்மசாரிக்கு ஸத்யலோகம் பலமென்று விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும் "என்று வைராக்கியம் அதிதீவிரமாக உதிக்குமோ அன்றே ஸன்யாஸம் பண்ணிக்கொள்ளவேண்டும். பிரும்மசரியாச்ரமத்திலிருந்தும் ஸன்யாசம் செய்துகொள்ளலாம்" என்ற சுருதி வசனத்தால் பிரும்மசரியாச்ரமத்திலிருந்து அதிதீவிர வைராக்யமுள்ள யாராவது ஒரு தீரபுருஷன் ஸன்யாச ஆச்ரமத்தையும் அடையலாமல்லவா? நைஷ்டிகபிரும்மசரியாக இருப்பவர்களும், பிரும்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸாச்ரமத்தையடைந்தவர்களும், விவாஹம் செய்துகொள்ளாததால், தோஷமுற்றவர்களென்று கூறுவதற்குப் பிரமாணம் யாதொன்றுமில்லை. இவ்வுலகத்திலிருக்கும் சகல ஜனங்களும் அனேகமாக அதிரர்களாகவும், வைராக்யம அற்றவர்களாகவும் இருப்பதால் விவாஹத்

தில் ஆசையுள்ளவர்களே அதிகரித்திருக்கிறார்கள், வைராக்ய சிலர்கள் தூர்லபர்களே ஆவார்கள். இதனால் புருஷர்கள் யாவருக்கும் விவாஹம் நித்யமென்று ஸித்தித்துவிடுமா? சாஸ்திரப்ரமாணத்தாலன்றோ அது சித்திக்கக்கூடும். அத்தகையப் பிரமாணம் யாதொன்றுமில்லை என்று முந்தியே கூறிவிட்டோம். இவ் விவாஹத்தை வெகுபேர்களே விரும்பட்டும். விருப்பமில்லாதவர்கள் வெகு சிலரே இருக்கட்டும். எவ்விதமிருந்தாலும், 'விவாஹம் காம்யம்' என்னும் சாஸ்திரத்திற்கு அனனுஷ்டானப்ரயுக்தமாயுள்ள அப்ரமாண்யம் விலகி பிராமாண்யம் சித்தித்துவிடும். (ஆகவே விவாஹத்தை வெகுபேர்கள் விருப்பங்கொண்டு, அனுஷ்டித்துவரும் காரணத்தைக்கொண்டு புருஷர்களுக்கு விவாஹம் நித்தியமென்று ஸ்தாபிப்பதற்கு இடமில்லை, வெகு சிலரோ விவாஹத்தை வெறுத்து ஸன்யாசத்தை அனுஷ்டித்துவருவதால் ஸன்யாசம் காம்யம் இல்லையென்று மறுத்துவிடவும் இடமில்லை என்று இங்கு கருத்தாகும்.) ஆகலால் புருஷர்களுக்கு விவாஹம் காம்யம் என்று ஒப்புக்கொள்வதுதான் சாஸ்திரீயமாகும். இவ்வாறாக விவாஹம் காம்யமென்று ஸித்திக்கவே, அக்காம்ய விவாஹத்தில் புருஷர்களுக்கு வயோநிர்ணயம் செய்வது அவசியமில்லை. ஏனென்றால் அக்காம்ய விவாஹத்தில் புருஷர்களுக்கு காமாதீனமாகவே தான் பிரவர்த்தியேற்படவேண்டும். அக்காமனென்னும் இச்சைக்கும் காலநியமம் சொல்லமுடியாது. எந்த மனுஷ்யனுக்கு எந்தவிஷயங்களில், எந்தக்காலத்தில் காமமுண்டாகுமென்று நிர்ணயம் செய்வதற்கு யாரால்தான் முடியும். ஆகவே எவர்களுக்கு எந்தகாலத்தில், விவாஹம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆவலேற்படுமோ அக்காலமேதான் புருஷர்களுக்குவிவாஹ காலமானதால், விவாஹத்தில் புருஷர்களுடைய வயோவிசேஷம் காரணமன்று.

அன்றியும் ஒரு விசேஷம் இவ்விஷயத்தில் உண்டு. விவாஹத்தில் ஆசையுள்ள புருஷர்களுக்குங் கூட 'ஐம்பது வயதுக்கு மேல் புருஷர்கள் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளக்கூடாது' என வசனத்தால் காலவிசேஷத்தில் விவாஹம் நிஷித்தமென்றால், புருஷ விவாஹத்திற்கு காமமும் காரணமில்லை என்ற அர்த்தம் சித்திக்கவில்லையா? காமமிருந்தும் காலவிசேஷத்தில் கல்யாணம் செய்துகொள்ள முடியவில்லையல்லவா? ஆதலால் ஐம்பது வய

துக்கு மேற்பட்டபுருஷர்களுக்கும், விவாஹத்தில் ஸ்வபாவமாக ஆசையில்லாதவர்களுக்கும் பிரும்மசரியம், வானப்ரஸ்தம், ஸன்யாசம், என்ற மூன்று ஆச்ரமங்களில் ஒன்றை அவலம்பிப்பது தான் உசிதமாகும். இவ்விஷயத்தை "கிருஹஸ்தாச்ரமத்திலாசை இருந்தால் விவாஹம் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிடின் நைஷ்டிகபிரும்மசர்யாச்ரமத்திலோ, வானப்ரஸ்தாச்ரமத்திலோ, அல்லது பரமஹம்ஸாச்ரமத்திலோ, இருந்துவிடலாம்" என்ற ஸ்மிருதிகளும் உரைக்கின்றன. ஆதலால் வரனுடைய வயோவிஷயத்தில் ஸம்சயம் அதிகமில்லாததால் ஸ்திரீகளின் விவாஹவயதைத் தான் நிர்ணயம் செய்யவேண்டும். உபநயனஸ்தானத்தில் உபதேசிக்கப்பட்டிருப்பதாலும், செய்யாவிடின் தோஷம் விதிக்கப்பட்டிருப்பதாலும், ஸ்திரீகளுக்கு விவாஹமென்பது நித்யமேயாகும். புருஷர்களுக்குப்போல் காம்யமல்ல. சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்கு விவாஹஸம்ஸ்காரத்தை உபநயனஸம்ஸ்கார ஸ்தானத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது மனுஸ்மிருதியில் "ஸ்திரீகளுக்கு" ஜாதகர்மம் முதலியவைகளைச் சரீரசுத்தியின்பொருட்டு அதனதன் காலத்தில் க்ரமந்தவராமல், மந்திரமில்லாமல் தூஷ்ணீமாகவே செய்யவேண்டும்" என்று கூறிவிட்டு பிறகு "விவாஹமென்ற கர்மாவொன்றுதான் ஸமந்த்ரகமாகவும், உபநயனரூபமாகவும் ஆகும். பதிகிருஹவாசமே குருகுலவாசம். பதிக்ருஹகாரியமே ஸமிதாதானகாரியமாகும்" என்று ஸ்திரீகளுக்கு விவாஹத்தை உபநயனரூபமாகவும், ஸமந்திரகமாகவும் பிரதிபாதித்திருக்கின்றார். இம்மனுவசனத்தில் ஸ்திரீகளுக்கு விவாஹமென்பது "வைதிகஸம்ஸ்காரம்" என்று மட்டிலும் அறிவிக்கப்படுகிறதேயன்றி அது உபநயனரூபமென்றும், ஸமந்த்ரகமென்றும் பிரதிபாதிக்கப்படவில்லை என்று சங்கிக்காமலிருப்பதற்காகத்தான் பதிசுச்ரூஷையை குரு சுச்ரூஷையாகவும், பதிகிருஹகாரியங்களையே ஸமிதாதானரூபமாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தையே ஸ்பஷ்டமாகவும் அடுத்த சுலோகத்தில் மனு "இவ்விவாஹமே மூன்று வர்ணத்து ஸ்திரீகளுக்கும் த்விஜத்வ (இரண்டாவது ஜன்மாவுக்கு) காரணமாயிருக்கும் உபநயனரூபமாகும்என்று கூறியிருக்கின்றார். ஸ்திரீகளுக்கு விவாஹம் உபநயனரூபமல்லவென்று சொல்லும்பக்ஷத்தில் அதை உபநயனகர்மாவாகவும், பிராம்மணஜாதி ஸித்திக்குக்காரணமாகவும் உபஸம்ஹாரம்

செய்திருக்கும் இவ்வசனம் ஸங்கதமாகுமன்றோ? யாக்யவல்கி
யரும் தன் ஸ்மிருதியில் பிரும்மசர்யப் பிரகாணத்தில் 'ஜாதகர்மா
திகளை ஸ்திரீகளுக்கு மந்திரமில்லாமலும், விவாஹத்தை மட்டிலும்
மந்திரபூர்வகமாகவும், செய்விக்கவேண்டும்" என்று கூறியுள்ளார்,
அப்படியே வ்யாக்ரபாதரும் "ஸ்திரீகளுக்கு விவாஹம் உபனய
ரூபமென்று மனு கூறியிருக்கின்றார்" என்று கீழ்க்கண்ட மனு
ஸ்மிருதி வசனத்தை அநுவதாம் செய்து தமது அபிப்பிராயத்
தை அறிவித்திருக்கின்றார். இவ்வண்ணமே பிதாமஹரும் "ஸ்தி
ரீகளுக்கு விவாஹமமே உபநயனகர்மாவாகுமென்றார். இப்பிதா
மஹ வசனத்தையே "பிதாமஹர் ஸ்திரீகளுக்கு விவாஹம் உபநய
ன ரூபமென்று சொல்லுகிறார்" என்று யமஸ்மிருதியில் அனுவா
தம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்விதமே போதாயன மகரிஷி
யும், தச்சேஷஸூத்திரத்தில் "புத்திரனுக்கும், புதல்விக்கும் ஜாத
கர்மாதிகள் செய்யவேண்டுமென்பது ஸமானமேயாகும்" என்று
கூறி "விவாஹமே ஸ்திரீகளுக்கு உபநயனரூபமென்று கூறியுள்
ளார், இந்த ஸ்மிருதி வசனங்களால் ஸ்திரீகளுக்கு விவாஹமென்
பது உபநயன ரூபமென்று ஏற்பட்டது. பிராம்மண க்ஷத்திரிய
வைசியர்களென்ற த்விஜர்களுக்கு உபநயனம் நித்தியமாகவே
அனுஷ்டிக்கவேண்டுமென்பது பிரசித்தம். அவ்வுபநயன ஸம்ஸ்
காரத்தாலேயே அவர்களுக்கு த்விஜத்வம் (இரண்டாவதுஜந்மம்)
ஸித்திக்குமென்று தர்மசாஸ்திர சித்தாந்தம். இவ்விஷயம் "பிரா
மண க்ஷத்ரியவைசியர்களை த்விஜர்களென்று உரைப்பதற்கு
தாயாரிடம் ஜனனமெடுப்பதும் உபநயன ஸம்ஸ்காரமும்தான்
காரணம்என்று மனுஸ்மிருதியிலும், யாக்ஞவல்க்ய ஸ்மிருதியிலும்
அறிவிக்கப்பட்டுள்ளது ஆகவே, த்விஜத்வம் சித்திக்கும்பொருட்டு
த்விஜகுமாரர்களுக்கு உபநயனஸம்ஸ்காரம் அவசியம்அனுஷ்டிக்க
வேண்டுமென்பதுபோலவே, த்விஜாதிப்பெண்களுக்கும் உபந
யன ரூபமாக விதிக்கப்பட்ட விவாஹஸம்ஸ்காரத்தால் தான் த்வி
ஜத்வம் ஸித்திக்கும். த்விஜர்களுக்கு த்விஜகுல ஜனனத்தால்மட்
டிலும் த்விஜத்வம் இல்லையென்பது எப்படியோ அப்படியே த்வி
ஜாதி ஸ்திரீகளுக்கும் த்விஜகுல ஜனனத்தால்மட்டிலும் த்விஜத்வ
மில்லை. ஆகவே விவாஹஸம்ஸ்காரத்தால் தான் பிராம்மண ஸ்திரீ
களென்றும், க்ஷத்திரியஸ்திரீகளென்றும், வைசிய ஸ்திரீகளென்
றும் ஸ்திரீகளை விவகரிக்கமுடியும். விவாகமில்லாமல்போனால் ஸ்தி

ரீகளுடைய ஜாதிபேதமும் அற்றுவிடும். ஆகையால் ஸ்திரீகளிடத்தில் பிராம்மண்ய சித்திக்குக்காரணமாகிய விவாகம் ஸ்திரீகளுக்கு நித்யமென்று சித்தம். புருஷர்களுக்கோவென்றால் உபயனத்தினாலேயே பிராம்மண்யம் முன்பே சித்தித்துவிட்டதால் விவாகம் நித்யமன்று.காம்யந்தான்.(இதுகாறும்ஸ்திரீகளுக்கு விவாகத்தை உபநயனஸம்ஸ்கார ஸ்தானத்தில் விதிக்கப்பட்டிருப்பதால் நித்யமென்று நிரூபிக்கப்பட்டது. இனி ஸ்திரீகளுக்கு விவாகம் செய்விக்காதபக்ஷத்தில் தோஷம் விதிக்கப்பட்டிருக்கும் காரணத்தாலும்நித்யமென்று தான் சொல்லவேண்டுமென்று விஷயத்தை விமர்சம் செய்வாம்.

சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யாமலிருந்தால் தோஷமுண்டென்று விதிக்கப்பட்டுளது. அந்த தோஷம் இரண்டுவிதம். ஒன்று விவாஹத்தில் கன்யாதானம் செய்யவேண்டியவர்களாகவிருக்கும் தகப்பன் முதலியவர்களுக்கு ஏற்படும் தோஷம். மற்றொன்று விவாஹத்தில் தானதிரவ்யமாயிருக்கும் கன்யகைகளுக்கு ஏற்படும் தோஷம். மனுஸ்மிருதியில் விஹித காலத்தில் கன்யாதானம் செய்யாமலிருக்கும் தகப்பன் முதலியவர்களுக்கு தோஷம் ஸம்பவித்துவிடுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த தோஷத்தை பாபரூபமாயுள்ள தோஷமென்று தான் சொல்லவேண்டுமேயொழிய லௌகிகஜனங்களின் நிந்தாரூபமன்று. ஆனால் மனுஸ்மிருதியில் அது எப்படிப்பட்ட பாபம் என்றும் எந்த பாபத்திற்கு ஸமானமென்றும் விசேஷித்துச் சொல்லப்படவில்லை ஸாமான்யரூபமாகவே தோஷமுண்டென்று தான் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. யாக்ஞவல்க்யஸ்மிருதி முதலியவைகளிலோ இந்த தோஷம் விசேஷரூபமாகவும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது — யாக்ஞவல்க்யர் 'தந்தை, பிதாமஹன் உடன்பிறந்த ஸஹோதரர்கள் தாயாதர்கள், தாயார் என்றவர்கள் கிரமமாக கன்யாதானாதிகாரிகளாவார்கள்" என்று கூறிவிட்டுப் பிறகு இவர்கள் விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்யாமலிருப்பார்களானால் ஒவ்வொரு ருதுவிலும்'ப்ரூணஹத்தி' என்னும் பாபத்தையடைவார்கள் என்னும் வசனத்தால் விஹித காலத்தில் கன்யாதானம் செய்யாமலிருப்பவர்களுக்கு விசேஷரூபமாகவும்தோஷத்தையறிவித்திருக்கின்றார் இத்தகைய ஸ்மிருதி வசனங்கள்பலவுண்டு. அவைகளைப் பிறகு எடுத்துரைப்போம்.

இங்கு சிலர் கூறுவதாவது-“விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்துகொடுக்காமலிருக்கும் கன்யாதானதிகாரிகளுக்கு ப்ரூண ஹத்திதோஷத்தையறிவிக்கும் ஸ்மிருதிகள் அனேகமிருந்தாலும் ஸ்மிருதிகளுக்குள் மிகப்பிராசீனமாயிருக்கும் மனுஸ்மிருதியில் வாச்யன்” என்று கூறி ஸாமான்யமாகத் தோஷமுண்டென்பதாக மட்டிலும் அறியப்படுகின்றதால் விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்யாமலிருப்பவர்களுக்கு தோஷம் அதிகம் யாதொன்றும் இல்லை. தோஷஸாமான்யத்தையறிவிக்கும் இம்மனுவசனத்திற்கு ‘ப்ரூணஹத்தி’ என்னும் தோஷவிசேஷத்தை விதிக்கும் ஸ்மிருதி வசனங்களையனுஸரித்து ப்ரூணஹத்தி என்னும் தோஷத்திலேயே தான் தாத்பர்யமென்று ஏகவாக்யதைமூலமாக அர்த்தகல்பனம் செய்வதும் ஸரியல்ல. ஏனென்றால் ஏகவாக்கியதைமூலமாகவே எல்லா ஸ்மிருதிகளுக்கும் அர்த்தம் கூறவேண்டியது அவசியம் என்பதற்குப் பிரமாணமில்லை. தவிற வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மகரிஷிகளால் வெவ்வேறு அர்த்தத்தையறிவிக்கும் ஸ்மிருதிகளெல்லாவற்றிற்கும் ஏகவாக்கியதை என்பதும் ஸம்பவிக்காது. ஸ்மிருதிகாரர்களுக்குள் மனு மிகப்பிராசீனரென்பதில் விவாதமில்லை. மற்ற ஸ்மிருதிகர்த்தாக்களோ மனுவுக்கு நவீனர்களேயாவார்கள். இவ்விதமிருக்க மனுமகரிஷியால் தமது காலத்திலிருக்கும் விவாகம முதலிய ஆசாரங்களின் அனுஷ்டானமுறையையறிவிக்கும்பொருட்டு எழுதிவைக்கப்பட்டிருக்கும் வசனத்திற்கு அதன் பிற்காலத்திய ஆசாரானுஷ்டானக் கிரமங்களை அவருக்குப்பின்பு உதித்திருக்கும் மஹரிஷிகளால் யாவருமறியுமாறு வரைந்துவைக்கப்பட்டிருக்கும் ஸ்மிருதிவசனங்களுடன் ஏகவாக்கியதையால் ஏகார்த்தமென்பது எப்படி முடியும்? ஸ்மிருதிகளை இயற்றிய மகரிஷிகளுக்குள் இருக்கும் பரஸ்பரம் காலபேதத்தால் அவர்களுடைய ஸ்மிருதிவசனங்களும் அதன் அர்த்தமும் பேதத்தையடையுமன்றோ? கீழ்கண்ட மனு யாக்ஞவல்க்ய ஸ்மிருதிவசனங்களிரண்டிலும் அர்த்தபேதமும் வெகு வெளிப்படையே, மனு விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்துகொடுக்காமலிருப்பவர்களுக்குப் பாபமுண்டென்று ஸாமான்யமாக நிரூபித்துள்ளார். யாக்ஞவல்க்ய மஹரிஷியோவெனின், அந்தப்பாபம் ப்ரூணஹத்யாரூபமென்று விசேஷரூபமாகவும் விதித்திருக்கின்றார். இவ்விதம் விரோதப்பட்ட கருத்தை உரைக்கும் இவ்வசனங்களு

க்கு ஏகவாக்யத்தை எப்படிப்பொருந்தும்? ஆகையால் மனுவுக்குப் பின்காலத்தில் அவதரித்திருக்கும் யாக்ஞவல்கியர், வசிஷ்டர், போதாயனர், வாமதேவர், பாரத்வாஜர், ஆங்கிரஸ், முதலிய நவீன மஹரிஷிகளுக்குத்தான் 'விஹிதகாலத்தில் விவாஹம் செய்து கொடுக்காமலிருப்பவர்களுக்கு ப்ரூணத்யை முதலிய பெரிய பாபங்கள் ஸம்பவிக்குமென்றும் தோற்றம் விபரீதயுக்திவாதத்தை மூலமாகக்கொண்ட பிரமக்ஞானமேயொழிய மிகப்பிராசீனராய் இருக்கும் மனுவுக்கு இவ்விதம்பிரமக்ஞானமில்லையென்று

இவ்வாக்ஷேபத்திற்கு உத்தரம் கூறுவாம்:—

மனுமகரிஷியானவர் மிகப்புராதனரென்றும், மற்றுமுள்ள அங்கிரஸ் முதலிய மகரிஷிகள் நவீனர்களென்றும், எதன் மூலமாக நிர்ணயம் செய்துகொண்டார்களென்று இவர்களை ஒரு கேள்வி கேட்கவேண்டும். காலபேதமூலமாகநிர்ணயம்செய்துகொண்டோமென்றார்களேயானால் அக்கால பேதத்தையும் கூட எதன் மூலமாக நிர்ணயம் செய்துகொண்டார்களென்று மற்றொரு கேள்வி கேட்கவேண்டும். மனுஸ்மிருதியின் ஆரம்பத்தில் "அங்கிரஸ் முதலிய மஹரிஷிகளை நான் எனது தபோமகிமையால் ஸ்ருஷ்டியாரம்பத்தில் ஸ்ருஷ்டித்தேன் என்று அங்கிரஸ் முதலிய மகரிஷிகளை தபோமஹிமையால் மனு ஸ்ருஷ்டித்ததாக சொல்லப்பட்டிருப்பதால், புத்திரர்களாகவிருக்கும் அங்கிரஸ் முதலிய மஹரிஷிகளைவிட தந்தையாயிருக்கும் மனுவானவர் மிகப்பிராசீனரென்ற காலபேதமும் நிர்ணயித்துக்கொள்ளப்பட்டதென்றால் இம்மனுவசனத்தால், அங்கிரஸ் முதலிய மகரிஷிகளைவிட மனுமகரிஷியானவர் மிகப்புராதனரென்றே சித்தித்துவிட்டதாக அங்கீகரித்தாலும் மனு ஸ்மிருதிக்கிரந்தமும் அங்கிரஸ் முதலிய மகரிஷிகளின் ஸ்மிருதிக்கிரந்தத்திற்கு முந்தியேதான் மனுமஹரிஷியால் செய்யப்பட்டதென்று நிச்சயமும் ஏற்பட்டது. மனுஸ்மிருதியிலிருந்து மனுமஹரிஷியானவர் மற்ற மஹரிஷிகளைவிடமிகப்பிராசீனனென்று ஸித்திக்குமேயானால், அவருடைய ஸ்மிருதிக் கிரந்தமும் மற்ற மகரிஷிகளின் ஸ்மிருதிகளைவிட மிகப்பிராசீனமென்றும் ஸித்தித்துவிடும். இதற்காக யுக்தி வேறொன்றும் தேவையில்லை என்றால் மனுஸ்மிருதியிலிருந்து மனுவானவர் மிகப்பிராசீனரென்று அறியப்படுவதாலேயே, மனுஸ்மிருதியும், மிகப்பிராசீனமென்று நிர்மானித்து விடலாமென்று சொல்லும பக்ஷத்தில், மனுஸ்மிருதியி